# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 26, 2022

Weekly E-paper ● March 26, 2022



## பெண் விடுதலைக்கான முன்மாதிரித் திட்டம்!

உதயகுமார்

### மக்கள் மேல் விழுந்த பெட்ரோல் சவுக்கடி

தமிழ் பிரபு

### வேண்டாம் நுழைவுத் தேர்வு !

தலையங்கம்

### ஏன், பெரியார் மதங்களின் விரோதி?

நூல் விமர்சனம் - மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மார்ச் 26, 2022 Weekly E-paper ● March 26, 2022


# பெண் விடுதலைக்கான முன்மாதிரித் திட்டம்!

**உதயகுமார்**

*“கல்யாணம் என்கின்ற பேரால் ஆணுக்குப் பெண்ணை அடிமையாக்குவதை கிரிமினல் ஆக்க வேண்டும். எப்படி தாசி முறை கிரிமினல் ஆக்கப்பட்டுவிடவில்லையா? அதுபோல அடிமை முறையையும் கிரிமினல் ஆக்க வேண்டும். ஆணுக்கு உள்ள அத்துணை உரிமையும் பெண்களுக்கு வரவேண்டும். பெற்றோர்கள் பெண்களை 22 வயது வரை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும். பிறகு அவர்களுக்கு ஒரு தொழிலும் கற்றுக் கொண்டு ஒரு வேலைக்கு லாயக்கு உள்ளவர்களாகச் செய்ய வேண்டும். பிறகு அவர்களாகப் பார்த்து தங்களுக்கு ஏற்றவனைத் தெரிந்து எடுத்துக்கொள்ள வேண்டுமே ஒழிய பெற்றோர்களாகப் பார்த்து பிணைத்துப் பிணக்கக் கூடாது.”*



தந்தை பெரியார் (விடுதலை 20.09.1973)

*பெரியாரின் இந்தக் கருத்துகள் இன்றளவும் இந்தச் சமூகத்தால் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியாத அதிர்வுகளைத் தருவன. ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பில் பெண்கள், திருமணம் என்னும் கூண்டுக்குள் அடைக்கப்படுகிறார்கள். எதற்காக ஒரு பெண்ணுக்குத் திருமண உதவி தேவைப்படுகிறது? ஏன் ஆண்களுக்கு திருமண உதவி தேவைப்படுவதில்லை?*

*பெண்ணுக்குத் திருமண உதவி என்பது அரசாங்கச் சட்டமாகத் தொடர்வது என்பது, அந்தச் சமூகத்தில் பெண்களின் நிலை அடிமைகளாக இருப்பதையே சுட்டும். இதுபோன்ற திருமண உதவித் திட்டங்கள் உருவாக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து சமூகம் முன்னேறி நகர்ந்து வருகிறது என்றால், திருமண உதவித் திட்டங்கள் மாற்றப்பட்டு, பாலினச் சமத்துவச் சட்டங்களாக மாற்றம் அடைய வேண்டும். அதுவே பெண் விடுதலைக்கான காலமாகும். பாலின சமத்துவச் சமூகத்தை அமைப்பதில் முன்னோடியாக, திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் திமுக அரசு செயல்படுகிறது.*

*1989இல் அன்றைய முதல்வர் கலைஞர் கருணாநிதியால், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை திட்டம் கொண்டுவரப்பட்டது. அதிமுக அரசு அத்திட்டத்தில் மாற்றங்கள் செய்து நடைமுறைப்படுத்தியது. இன்று தி.மு.கழக அரசு அதனை உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றி இருக்கிறது.*



*“பெண்களுக்குக் கல்விதான் நிரந்தரச் சொத்து அதனால்தான் மூவலூர் ராமாமிர்தம் திருமண உதவித் தொகை திட்டத்தை உயர்கல்வி உறுதித் திட்டமாக மாற்றியுள்ளோம்” என்று பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்திருப்பது, பெண்கள் உயர்கல்வியைத் தொய்வின்றித் தொடர்வதற்கு வழிவகை செய்யும். குடும்ப அமைப்பில் பெண்ணின் திருமணத்திற்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் என்பது பெண்ணின் உயர்கல்விக்குக் கொடுக்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட சூழலில் இது போன்ற சட்டங்கள் பெண்களின் உயர் கல்வியை உறுதி செய்வதோடல்லாமல், திருமணம் என்கின்ற நிபந்தனையின் அடிப்படையில் உயர்கல்வி ஊக்குவிக்கப்பட்ட நிலையை ஒழிக்கின்றன.*

*கடந்த 1989 முதல் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் என்ற பெயரில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. ரூபாய் 5000 நிதி உதவி வழங்கப்பட்டது. 2009இல் ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்பட்டது. முதலில் ஒருமுறை இந்தத் திருமண உதவித் திட்டத்தை நிறுத்திய அதிமுக அரசு இதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு 2011இல் ஆட்சிக்கு வந்தபோது தொகையை ரூபாய் 50 ஆயிரமாக உயர்த்தி, தாலிக்குத் தங்கம் 4 கிராம் என்பதை 8 கிராம் என்று உயர்த்தி 2016 முதல் நடைமுறைப்படுத்தி வந்தது. அதிமுக ஆட்சியில் பெறப்பட்டு நிலுவையில் உள்ள மனுக்களைத் தற்போது ஆய்வு செய்தபோது அதில் 24.5 சதவீதம் பேர் மட்டுமே தகுதியான பயனாளிகள் என்று கண்டறியப்பட்டது.*

*உயர்கல்வியில் பெண்கள் சேர்வது 46 சதவீதம் மட்டுமே இருப்பதால், அதைச் சரிசெய்து கல்வியே நிரந்தரச் சொத்து என்ற உயரிய நோக்கில்தான் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் தற்போது ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை வழங்கும் திட்டமாக திமுகழக அரசால் மாற்றப்பட்டுள்ளது. திருமண உதவித் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு சுமார் ஒரு லட்சம் பெண்கள் பயனடைந்தனர். ஆனால் இந்த ரூபாய் 1000 கல்வித் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஆறு லட்சம் மாணவிகள் பயன் அடைவார்கள் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.*

*சமூகநீதி வரலாற்றில் தொடர்ந்து பல்வேறு சாதனைகளைப் புரிந்து வரும் திமுக அரசு மேலும் ஒரு சாதனையைப் பெண் விடுதலை வரலாற்றில் செய்திருக்கிறது. இந்தத் திட்டம் என்பது இந்தியாவிற்கு மட்டும் முன் மாதிரியல்ல, உலக அளவில் கூட முன் மாதிரியானது.* ●

# மக்கள் மேல் விழுந்த பெட்ரோல் சவுக்கடி

## தமிழ் பிரபு

உத்தரப்பிரதேசம், கோவா, மணிப்பூர், பஞ்சாப், உத்தரகாண்ட் ஆகிய ஐந்து மாநிலத் தேர்தல்கள் சமீபத்தில் நடந்து முடிந்த நிலையில் நாட்டு மக்களுக்குச் சவுக்கடியைப் பரிசாகத் தந்துள்ளது மோடி அரசு.

ரூ.367 ரூபாய்க்கு விற்ற சிலிண்டர் விலை படிப்படியாக உயர்ந்து இன்று வானுயர்ந்து நிற்கிறது. ஏழை எளிய மக்களின் தலையில் மீண்டும் மீண்டும் பேரிடியை இறக்குகிறது மோடி அரசு.

சிலிண்டருக்கு 50 ரூபாய் ஏற்றி தற்போது 967.50 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது சமையல் எரிவாயு விலை. தேரை இழுத்து வந்து தெருவில் விட்ட கதையாக, மானிய விலையில் கிடைத்து வந்த சமையல் எரிவாயு இன்று மக்களைத் தெருவில் வந்து நிறுத்தியுள்ளது.

இதில் “137 நாட்கள் விலையை ஏற்றாத வீரிய அரசு” என்று சங்கிகளும், அதன் ஆதரவு ஏடுகளும் தலையங்கம் தீட்டுவது எரிகிற புண்ணில் உப்பைத் தடவுவது போல உள்ளது.

இதுவும் போதாதென்று பெட்ரோல் விலையினை 76 காசுகளும், டீசல் விலையினை 76 காசுகளும் உயர்த்தி மக்கள் மீது மண்ணை வாரித் தூற்றியுள்ளது மோடி அரசு. சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ. 102.16-க்கும், டீசல் விலை தற்போது ரூ.92.19-க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் அனைத்துப் பொருட்களின் விலைவாசியும் உயர்ந்துள்ளது.

மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இது குறித்து விதி எண் 267-ன் கீழ் விவாதிக்க அனுமதி கோரி எதிர்க்கட்சிகள் அறிக்கை அளித்தன. திமுக உறுப்பினர் டி.ஆர்.பாலு எரிபொருள் மற்றும் எல்பிஜி சிலிண்டர் விலை உயர்வைக் கண்டித்து விவாதிக்க வேண்டும் எனக் கேட்டதற்கு உடனே அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

“இந்திய அரசு இந்த விலை உயர்வைத் திரும்பப் பெற வேண்டும்” என்று டி.ஆர்.பாலு கூக்குரலெழுப்பினார். ஆனால், அவைத் தலைவர் அனுமதி தராத காரணத்தால், அவையில் தொடர்ந்து கூச்சல் குழப்பம் அமளி ஏற்பட்டதைத் தொடர்ந்து அவை ஒத்திவைக்கப்பட்டது.





மக்களின் அத்தியாவசியத் தேவைகள் குறித்துப் பேசக்கூட அனுமதி மறுப்பது எதேச்சதிகாரத்தின் கோர முகத்தை அப்பட்டமாகக் காட்டுகிறது. மக்களின் நலன் கருதும் அரசாக இருந்தால் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாகத் திரும்ப பெற வேண்டும்.

பெரும்பான்மையாக வெற்றி பெற்ற ஒரு அரசு தனக்கு வாக்களித்த மக்களுக்கு என்ன செய்யவேண்டும் என்பதைத் தி.மு.க தலைமையிலான தமிழக அரசைப் பார்த்து ஒன்றிய அரசு கற்றுக்கொள்ள வேண்டும்.


கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு உடனடியாகப் பெட்ரோல் விலையை லிட்டருக்கு ரூ.3 குறைத்தது. இடைக்கால நிதிநிலை அறிக்கையும், நிதிநிலை அறிக்கை 2021 மற்றும் இப்போது தாக்கல் செய்த 2022 நிதிநிலை அறிக்கையும் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட வரிச்சுமையில்லாத நிதிநிலை அறிக்கையாக உள்ளன. இதுதான் மக்களுக்கான அரசு.

மக்களுக்கான முக்கியப் பிரச்சனைகளைக் கூட நாடாளுமன்றத்தில் பேச விடாமல் தடுக்கும் ஒன்றிய அரசின் செயல் பாசிசத்தின் அடையாளம்.

●

# கொள்கைக் குன்று அழகிரி

- “அஞ்சாநெஞ்சன் அழகிரியின் பால் கொண்ட அன்பால், ஈர்க்கப்பட்ட பேச்சால் நான் வளர்ந்து நிற்கிறேன்” – தலைவர் கலைஞர்
- பட்டுக்கோட்டையில் முதன் முதலாகச் சுயமரியாதை இயக்கம் தொடங்கிய இவர், உறுப்பினர்களைச் சேர்த்து முதலில் சுயமரியாதைப் பிரச்சாரம் தொடங்கியவர்.
- தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்பட்ட போது இராமாமிர்தம் அம்மையாருடன் சேர்ந்து தஞ்சாவூரில் இருந்து சென்னை வரை இந்தி எதிர்ப்புப் பிரச்சார நடைபயணத்தை மேற்கொண்டவர்.



- திராவிட இயக்கக் கொள்கைகளில் வலிமையான, உறுதியான பற்றும், பிடிப்பும் கொண்ட இவர் தந்தை பெரியாரின் தளபதிகளுள் ஒருவராகத் திகழ்ந்தவர்
- “ 30 ஆண்டுகளில் என் கொள்கை, திட்டத்தில், ஆலோசனையில் தயக்கம் கொள்ளாமல் நம்பிக்கை வைத்துத் தொண்டாற்றியவர். அவரது முழு வாழ்க்கையிலும் இயக்கத் தொண்டு தவிர வேறு எதிலும் ஈடுபட்டதில்லை” – தந்தை பெரியார்
- அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி 23-06-1900 ஆம் ஆண்டு பிறந்தார், 28-03-1949 அன்று மறைந்தார்.

●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## வேண்டாம் நுழைவுத் தேர்வு !

நுழைவுத் தேர்வு என்ற நரித்தனத்தின் மூலம் நாட்டின், குறிப்பாகத் தமிழ்நாட்டின் பார்பனர் அல்லாத, ஏழை நடுத்தர, பட்டியலின, கிராமப்புற மாணவர்களின் கல்வியை ஒழித்துக்கட்டும் வேலையைச் செய்து கொண்டு இருக்கிறது பா.ஜ.கவின் ஒன்றிய மக்கள் விரோத அரசு.

ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்களில் இனி இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகளில் சேர வேண்டுமானால் “CUET” ( சென்ட்ரல் யுனிவர்சிட்டி எலிஜிபி லிட்டி டெஸ்ட்) எனப்படும் நுழைவுத் தேர்வு எழுதவேண்டும் என்று யுஜிசி தலைவர் ஜெகதீஷ்குமார் கூறியிருக்கிறார்.

இந்த நுழைவுத் தேர்வின் மூலம் பட்டப் படிப்பிற்குப் போகும் மாணவர்களின் 12ஆம் வகுப்பு மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

நுழைவுத் தேர்வு மூலம் ஏழை நடுத்தர, பட்டியலின, கிராமப்புற மாணவர்களை வடிகட்டி, பார்ப்பன மாணவர்களுக்கான கல்வித் திட்டம் இது. மூன்று ஆண்டு பட்டப் படிப்பு இதன் மூலம் நான்கு ஆண்டுகளாக உயர்த்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் பட்டயச் சான்று போன்றவைகளைக் கொடுத்து மாணவர்கள் படிப்பை இடைநிறுத்தும் சூழ்ச்சியும் இந்நுழைவுத் தேர்வில் இருக்கிறது.

2022- 23ஆம் கல்வியாண்டிற்கான நுழைவுத் தேர்வை நடத்தும் இதே ‘தேசிய தேர்வுகள் முகமை’தான் மாநில வாரியாக கிராமப்புறங்களில் இருந்து நீட் தேர்வு எழுதும் மாணவர்களின் விபரங்கள் தம்மிடம் எதுவும் இல்லை என்று கைவிரித்திருக்கிறது.

பார்ப்பனியக் குலக்கல்வி திட்டத்தை மீண்டும் கொண்டுவர வழி வகுக்கும் இது போன்ற நுழைவுத் தேர்வுகளை அனுமதிக்கக் கூடாது. அதற்கு ஒரே வழி மாநிலப் பட்டியலுக்குக் கல்வியை மாற்றுவதுதான். இது மாநில சுயாட்சியின் உரிமைக்கு உள்பட்டது.

சட்டப்பேரவையில் கல்வியமைச்சர் பொன்முடி எந்த நுழைவுத் தேர்வையும் தமிழ்நாட்டில் அனுமதிக்க மாட்டோம் என்று கூறியிருக்கிறார்.

இதில் மாணவர்களின் எதிர்காலம் பற்றிய அச்சம் இருப்பதால், அவர்களும் நுழைவுத் தேர்வு குறித்த ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலம் இது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## தஞ்சையில் (25.3.2022) மூன்று நூல்கள் அறிமுகம்

'திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்',

'சாதியப் பண்பாட்டுப் பொருளாதாரம்', 'ஒழுகும் குடிசையும் ஒளிரும் கல்வியால்'

### இனமானப் பேராசிரியர் படிப்புவட்டம்



நூல் அறிமுக அரங்கம்.



பேராசிரியர் சுப.வீரபாண்டியன் உரையாற்றுகிறார்.



அரங்கில் படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர் மதிவாணன், ஒரத்நாடு குணசேகரன்.



மாவட்டச் செயலாளர் செல்லக் கலைவாணன் உரை நிகழ்த்துகிறார்.

நூல் அறிமுகம்

# ஏன், பெரியார் மதங்களின் விரோதி?




மதிவாணன்

பேரவைத் தோழர்கள் வெற்றிச்செல்வன் மற்றும் உதயகுமார் ஆகியோரின் சிந்தனையில் வெளிவந்துள்ள இந்த நூல், பெரியாரின் பார்வையில் மதம் பற்றிய கருத்துகளை அலசுகிறது.

தலைப்பே அதன் உள்ளடக்கத்தைத் தெளிவாக விளக்குகின்றது. பெரியார் மதங்களின் விரோதியா என்று கேட்கப்படவில்லை. மாறாக ஏன் பெரியார் மதங்களின் விரோதி என வடிவமைத்து உள்ளனர் இந்நூலை.

அதாவது பெரியார் மதங்களின் விரோதி என்பதை விளக்கவே, இவ்வாறாகத் தலைப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

பழங்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மதங்களின் விதிமுறைகள் மக்களின் வாழ்க்கை முறையை நெறிப்படுத்தவே என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால் இக்கால நடைமுறைக்கு ஏற்றவாறு ஒவ்வொரு நாட்டுக்கும் சட்டங்களாக இருக்கின்றன.

ஆகவே மதங்கள் தேவை இல்லை என்ற பெரியாரின் சிந்தனையுடன் பளிச் என்ற தொடக்கம் அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. பெண்ணியக் கண்ணோட்டத்தில் மதங்களின் தேவை என்பது மேலும் கருத்தாழம் உடைய பகுதியாக அமைந்துள்ளது.

ஆண்களால், ஆண்களுக்காகச் செய்யப்பட்ட மதக் கோட்பாடுகளில் பெண்களுக்கான நிலை, இரண்டாம் நிலையே . இதற்கு மதங்களில் கூறப்பட்டுள்ளவை, குறிப்பாக மனுநீதியில் சொல்லப்பட்டவை, அதற்கு அடுத்தே 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற நூலில் கூறப்பட்டவை பொருத்தமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆண்களிடம் பெண்கள் பற்றிய தீய கருத்து உருவாக்கம் செய்யும் மனுநீதியின் பகுதியையும் கூடுதலாக இணைத்து இருக்கலாம் எனத் தோன்றுகின்றது.

அதே போல தாழ்த்தப்பட்டோர் கண்ணோட்டத்தில் இருந்து மதங்களை அணுகும் பொழுது, தங்களின் கொடுமைகள் தீர மதம் மாறினால் அதில் யாதொரு சிக்கலும் இல்லை என்று தெளிவுப்படுத்தி இருக்கிறார் பெரியார்.

அதே நேரத்தில் அந்த அந்த மதத்தில் இருக்கும் பிற்போக்குச் செய்திகளைச் சாடத் தயங்கவில்லை அவர்.

அம்பேத்கரின் மதமாற்றத்தை ஆதரித்த பெரியாருக்கு, புத்த மதம் குறித்த சிந்தனை எவ்வாறு இருந்தது என்று அறிந்து கொள்ளும் ஆர்வம் இங்கு இயல்பாகப் பிறக்கும்.

புத்தரின் கொள்கைகள், அறிவுக்கு முதன்மை கொடுக்கும் வகையிலும், பார்ப்பனியத்திற்கு எதிர் சிந்தனை உடையவையாகவும் இருக்கின்றன.

ஆனால் மதம் சடங்கு என்று வரும் பொழுது, அது பெரும்பாலும் இந்து மதத்தில் இருந்து வேறுபடுவதில்லை. மாறாகப் புத்தத்தை மதமாக ஏற்காமல் கொள்கையாக ஏற்பது பொருத்தமாக இருக்கும்.

ஆனால் தீண்டாமைக் கொடுமைகளில் இருந்து விலக அதனினும் சிறந்த வழியாக இஸ்லாத்தையே கருதி இருக்கிறார் பெரியார். மதமாற்றத்திற்கு எதிராக பெரியார் என்றும் நின்றதில்லை. அது அவரவர் சூழல் தொடர்புடையதாகும்.

அப்படியானால் பெரியார் சொல்லும் வழிதான் என்ன என்ற கேள்வி இங்கு வருகிறது. பெரியாரின் சிந்தனைப்படி மதம் என்ற ஒன்று தேவையே இல்லை. யார் ஒருவரும் தனக்கான வேறு சில காரணங்களுக்காக மதம் மாறித் தங்கள் இன்னல்களை தீர்த்துக் கொள்ள முடியுமானால் சரி. ஆனால் மதம் இல்லாத சமூகமே இலக்கு என்பதே பெரியாரின் கொள்கையாக இருக்கிறது.

இதைப் பெரியாரின் சொற்களிலேயே சொல்வதானால், இந்து மதத்தை நீக்கிவிட்டு வேறு எந்த மதத்தைப் பின்பற்றுவது என்று கேட்பவர்களுக்கு, வீட்டில் நாற்றம் அடிக்கிறது எடுத்து அதை வெளியே எறி என்று சொல்கிறேன்.

அப்படியானால் அங்கு என்ன வைப்பது என்று சிலர் கேட்கிறார்கள், அங்கு எதையும் வைக்க வேண்டியதில்லை என்பதுதான்.

இந்தத் தலைப்புக்கு ஏற்ற நிறைய தரவுகளைத் தொகுத்து இந்நூலின் ஆசிரியர்கள் தங்கள் தர்க்கத்தைச் சிறப்பாக நிறுவியுள்ளனர்.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian